**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. TAMIL NADU MINERALS LIMITED GREY GRANITE QUARRY, SF.NO. 283 (PART), LEASE OVER AN EXTENT OF 34.35.5 HA AT SULAMALAI VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 26.09.2024 AT 11.00 AM M/S. SRI MAHESHWARI MAHAL, D.NO. 1/190, NH-77, TIRUVANNAMALAI MAIN ROAD, ANCHOOR VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S.Babu | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. S.Muthuraj | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.K.Sakthivel | : | Divisional Manager M/s. Tamil Nadu Minerals Limited Grey Granite Quarry, Krishnagiri |
| 5 | Thiru.E.Ganesan | : | Deputy Manager, M/s. Tamil Nadu Minerals Limited Grey Granite Quarry, Krishnagiri |
| | Public | : | 46 Nos. (Attendence enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Tamil Nadu Minerals Limited Grey Granite Quarry, SF.No. 283 (Part), lease over an extent of 34.35.5 Ha at Sulamalai Village, Bargur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 22.08.2024 and bit notices regarding public hearing was issued to the public of J.Sulamalai Village, Malakottai Village, ManjuKottai Village and Jittobanapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed grey granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.E.Ganesan, Deputy Manager, M/s. Tamil Nadu Minerals Limited Grey Granite Quarry, Krishnagiri of the proposed Grey Granite quarry project has made presentation about the proposed Grey Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed grey granite quarry project.

The views and suggestions of the public are detailed below:

**1. Tmt. Lakshmi Priya, Vice President, Soolamalai Panchyat:**

Tmt. Lakshmi Priya has said that the Krishnagiri district is famous for its Mangos and granites. The granite manufactured by the TAMIN is also renowned. However, the company's quarry has now been closed, resulting in loss of revenue and lack of employment opportunities and now this proposed project will generate income to the village and the villagers will get direct and indirect employment opportunities. Also, she said that TAMIN's methods of controlling noise pollution and air pollution are excellent. Finally, she requested to provide a road facility to her village.

**2. Thiru. Munirathinam, Soolamalai Panchyat:**

Thiru. Munirathinam has said that the Krishnagiri district is famous for its Mangos and granites. He said that during the operation of the quarry, there will be more dust and noise pollution generated, but these can be controlled with the advanced technology. As TAMIN company is using these technologies, there will be no harm to the public, therefore, he welcomes the proposed project.

3. **Thiru. Ramesh, Soolaamali Village:**

Thiru. Ramesh has said that I have been working with TAMIN for fifteen years as a contractor. At present, we have no employment opportunity due to lack of environmental clearance to TAMIN. Therefore, he said that by giving environmental clearance to this project, we will get employment opportunities.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 1 number of petition was received on the proposed M/s. Tamil Nadu Minerals Limited Grey Granite Quarry project during the public hearing meeting. The petition is enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Grey Granite Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| 23/9/2024 | | |
| **District Environmental Engineer** | **Revenue Divisional Officer** | **District Collector** |
| **Tamilnadu Pollution Control Board** | **Krishnagiri** | **Krishnagiri** |
| **Hosur** | | |
| | A/7 | A/7 |

**<u>தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரி, சர்வே. எண்.283 (பகுதி), சூலாமலை கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கிரே கிரானைட் குவாரி 34.35.5 ஹெக்டேர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 26.09.2024 அன்று எண். 1/190, தே. நெ எண். 77, திருவண்ணாமலை மெயின் ரோடு, அஞ்சூர் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 104 இல் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ மகேஷ்வரி மஹாலில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:</u>**

<u>பங்கேற்றோர்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாபு | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.செ.முத்து ராஜ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. K. சக்திவேல் | : | கோட்ட மேலாளர் தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரி, கிருஷ்ணகிரி |
| 5 | திரு. E. கணேசன் | : | துணை மேலாளர் தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரி, கிருஷ்ணகிரி |
| | பொதுமக்கள் | : | 46 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு

கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரியின் மேலாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினந்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 22.08.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், ஜெ சூலாமலை கிராமம், மேலகோட்டை கிராமம், மஞ்சுகோட்டை கிராமம், குமரன்கோட்டை கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் மேலாளர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரியின் மேலாளர் கிரே கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ்

லிமிடெட் கிரே கிரானைட் குவாரி மேலாளரை உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு. தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரி நிறுவனத்தின் துணை மேலாளர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கிரே கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திருமதி. லட்சுமி பிரியா, துணைத் தலைவர், சூலாமலை கிராமம்:**

திருமதி. லட்சுமி பிரியா அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டமானது மாங்கனிகள் மற்றும் கிரானைட்டிற்கு புகழ்பெற்றது அதேபோல், TAMIN நிறுவனத்தின் கிரானைட் சிறப்பு மிக்கது. ஆனால், தற்பொழுது இந்நிறுவனத்தின் குவாரியானது மூடப்பட்டுள்ளதால் வருவாய் இழப்பு மற்றும் வேலை வாய்ப்பின்மை ஏற்பட்டுள்ளது. தற்போது இந்நிறுவனத்தின் குவாரி மீண்டும் தொடங்குவதால், இக்கிராமத்திற்கு வருவாய் கிடைக்குமென்றும் கிராம மக்களுக்கு நேரடி மற்றும்

மறைமுக வேலை வாய்ப்பு கிடைக்குமென்றும் தெரிவித்தார். மேலும், TAMIN நிறுவனத்தின் ஒலி மாசு மற்றும் காற்று மாசு ஆகியவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் சிறப்பாக உள்ளதாக கூறினார். இறுதியாக, எங்களது கிராமத்திற்கு சாலை வசதி செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

2. **திரு. முனிரத்னம், சூலாமலை கிராமம்:**

திரு. முனிரத்னம் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டமானது மாங்கனிகள் மற்றும் கிரானைட்டிற்கு புகழ்பெற்றது. குவாரி இயக்கத்தின் போது அதிகளவில் தூசுக்கள் மற்றும் ஒலி மாசு ஏற்படும், ஆனால், தற்போது தொழில் நுட்பம் வளர்ந்துள்ள காரணத்தினால் இவை தவிர்க்கப்டும் என்று கூறினார். மேலும், TAMIN நிறுவனத்தினர் இத்தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதால் எவ்வித பிரச்சனையும் பொது மக்களுக்கு எற்படாது, எனவே, இக்குவாரி திட்டத்தை தன் வரவேற்பதாக கூறினார்.

**3. திரு . ரமேஷ், சூலாமலை கிராமம்:**

திரு. ரமேஷ் அவர்கள், தான் ஒப்பந்த மேஸ்திரியாக பதினைந்து வருடங்கள் TAMIN நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன். தற்போது, சுற்றுச்சூழல் அனுமதி இல்லாத காரணத்தினால் எங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. எனவே, இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதன் மூலம் எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்று கூறினார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக்

கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 1 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரனைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ,மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 27/9/2024 | | |
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** | **வருவாய் கோட்டாட்சியர்** | **மாவட்ட ஆட்சியர்** |
| **தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்** | **கிருஷ்ணகிரி** | **கிருஷ்ணகிரி** |
| **ஓசூர்** | 5/7 | 5/7 |